DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.92/2018 | Deposition of Witness for : PW4 |
| Name : திரு.வனசுந்தர் | Father/Husband Name : திரு.ராஜகோபாலன் |
| Age : 48 | Village : அம்பாசமுத்திரம் |
| Taluk : | Calling : காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24 June 2025
Accused absent. Petition U/s.317 Cr.PC filed and allowed.

**<u>முதல் விசாரணை :–</u>**

1. நான் தற்போது நாசரேத் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ஆய்வாளர் பிரவீன் குமார் மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்த ஆய்வாளர் ராஜ் ஆகியோர்களுடைய கையொப்பம் நன்கு பரிட்சயம் என்பதால் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 25.06.2013 ஆம் தேதி காவல் ஆய்வாளர் பிரவீன் குமார் அவர்கள் காலை 7 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி பின்பு சொத்துக்களையும், எதிரிகளையும் நிலையம் கொண்டு வந்து காவல்நிலைய குற்ற எண்.101/2013 ச/பி.379, 21(1)(v) Mines and Minerals Development Regulation Act 1959 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்பு எதிரிகளை கைது செய்து ஆவணங்களில் பதிவு செய்தார். பின்பு உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி எதிரிகள் சொத்துக்கள் சகிதம் கனம் நீதிமன்றம், சாத்தான்குளம் அவர்களுக்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

3. பின்பு வழக்கின் சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு வழக்கை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் ராஜ் அவர்களின் பார்வைக்கும் வைத்தார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் ராஜ் 16.05.2018 அன்று திருச்செந்தார் வட்டாச்சியர் திரு.தில்லைப்பாண்டி அவர்களை விசாரித்து மணல் மதிப்பீடு சான்று பெற்றார். பின்பு வழக்கின் சம்பவ சாட்சிகளை விசாரித்ததில் அவர்கள் ஆய்வாளர் பிரவீன் குமார் அவர்களிடம் கூறியது போலவே கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் சட்டப்பிரிவை 379, 21(1)(v) Mines and Minerals Development Regulation Act 1959 என்பதிலிருந்து 379 IPC ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தார். பின்பு இந்த வழக்கின் விசாரணை முடித்து 16.05.2018 அன்று எதிரிகள் மீது 379 IPC ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், மணல் மதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.4 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. இந்த வழக்கின் சம்பவம் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கை பதிவு செய்த அதிகாரி தான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரிகளில் ஒருவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.06.24 17:41:46 +0530

காவல்துறையினர் மற்றும் வருவாய் துறையினர் என்றால் சரிதான். எதிரிகள் மணலை திருடி வெளியில் விற்பனை செய்ததாக கூறியுள்ளனர் ஆனால் குறிப்பிட்டு எந்த இடம் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மணல் ஆற்று மணல் இல்லையென்றாலும், வீடு கட்டுவதற்காக வாங்கி சென்ற மணல் என்றாலும் சரியல்ல. எதிரிகளிடம் இருந்து டிராக்டர் மற்றும் மணல் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் காவல்நிலையத்திற்கு வரவழைத்து, பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

5. விசாரணை அறிக்கையின்படி எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபரத்திற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.06.24 17:42:05 +0530

Judicial Magistrate, Sathankulam.